எம்.சி.ஓ.பி. 21/2016 ம.சா.2 வினோத் த/பெ பாலகிருஷ்ணன்

**<u>21.04.2023 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நீதிமன்றத்தில் சாட்சியம் அளிப்பதற்காக எனக்கு அழைப்பாணை எதுவும் அனுப்பப்பட்டதா என்றால் இல்லை. ஆனந்தனின் மனைவி மல்லீஸ்வரி என்பவர் சாட்சியம் அளிப்பதற்காக என்னை அழைத்து வந்தார். நான் ஓட்டுனராக பணிபுரிந்து வருகிறேன். விபத்தின் போது நான் கிரீன் பார்க் பள்ளியில் பேருந்து ஓட்டுனராக பணி புரிந்து வந்தேன். தற்போது ஜுபிளி பள்ளியில் ஓட்டுனராக பணி புரிந்து வருகிறேன்.

2. விபத்தில் இறந்த ஆனந்தனும், நானும் ஒரே ஊரை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். ஆனந்தனுக்கு ஏற்பட்ட விபத்தை நான் நேரடியாக பார்த்தேன் நான் வேலை செய்யும் பள்ளியின் எதிரில் தான் விபத்து ஏற்பட்டது. விபத்து சம்மந்தமாக நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை. போலிசார் விபத்து குறித்து என்னை விசாரித்தார்கள். விபத்து நடந்த சமயத்தில் தான் விசாரணை செய்தார்கள்.

3. விபத்து சம்மந்தமாக பதிவு செய்யப்பட்ட குற்றவியல் வழக்கில் நான் சாட்சியம் அளித்தேனா என்றால் இல்லை. நான் விபத்து சமயத்தில் கிரீன்பார்க் பள்ளியில் ஓட்டுனராக பணிபுரிந்து வந்தேன் என்பதற்காக ஆதாரம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் யாரும் கேட்கவில்லை. அதனால் தாக்கல் செய்யவில்லை.

4. ஆனந்தன் என்பவர் தான் செல்போன் பேசிக் கொண்டு சாலை விதிகளை மீறி விபத்து சமயத்தில் இருசக்கரவாகனத்தை ஓட்டி சென்று விபத்திற்கு காரணம் ஆனார் என்றும் அது குறித்து ஆனந்தன் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும் ஆனால் ஆனந்தன் மீது தவறில்லை. அவர் விபத்திற்கு காரணம் அல்ல.

5.நானும் ஆனந்தனும் ஒரே ஊரை சேர்ந்தவர் என்பதாலும் அவர் என்னுடன் வேலை செய்து வந்ததாலும் அவருக்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றும் சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் சரியல்ல.